திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின்
செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.ச.முத்திளங்கோவன்,

ந.க.எண்.ஙு3/7491/2019 நாள்: 09.09.2019.

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திருநெல்வேலி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV-ல் அடங்கிய தட்டச்சர் பணிக்கு 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டுக்கு தட்டச்சர்கள் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் ந.க.எண்.1683/PSD-A/2019 நாள்:20.02.2019.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள்:27.02.2019.
3. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து வரப்பெற்ற பிரேரணைகள்.

******

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டு நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV-ல் அடங்கிய தட்டச்சர் பணிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் போட்டி தேர்வின் மூலம் தட்டச்சர்களாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 நபர்களுக்கு பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் தட்டச்சர் நிலையில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டு போட்டித் தேர்வின் மூலம் தட்டச்சர்களாக தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி IV-ன் கீழ் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டு நேரடி நியமனம் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்டுள்ள நிலுவை வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு பணியாளர்களுக்கு அவர்களுக்கெதிரே கலம் எண். 4-ல் குறிப்பிட்டவாறு தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியேற்பு தேதி | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | S.மகேந்திரன்,<br>தட்டச்சர்,<br>நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், | 05.03.2019 மு.ப | 05.03.2019 மு.ப |
| 2 | மு.உமா,<br>தட்டச்சர்,<br>அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், | 03.03.2019 மு.ப. | 03.03.2019 மு.ப. |

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

9/9/19

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
திருநெல்வேலி.

09/09/19

**பெறுநர்:**

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (உரிய வழியாக)

**நகல்:**

1) ஆணையாளர், நாங்குநேரி மற்றும் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியங்கள்.
2) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15 - சமர்ப்பிக்கப்படுகிறது.
3) செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 - சமர்ப்பிக்கப்படுகிறது.
4) ஙா3 பிரிவிற்கு.

மே.ந.க.க. எண் அ1/1886/19 நாள்: .09.19

தனியருக்கு சார்பு செய்யப்படுகிறது

Commissioner
Panchayat Union
Nanguneri
17/09/19

பெறுநர்
திரு. சு. மகேந்திரன்
தட்டச்சர்
ஊராட்சி ஒன்றியம்
நாங்குநேரி.